# ஆதிசேஷன் மீது.



D 1. PARAMAPADA NATHAN
PARAMAPADAM

ஆதிசேஷன் மீது காட்சிதரும் வைகுந்தவாசனே ,

ஆதியந்தம் ஏதுமில்லா பரமபதநாதனே !

ஆதிசேஷன் மீது......

ஆதிநாட்களில் அடியேன் செய்த பாவங்களை,

எண்ணி, எண்ணியே மனம் கலங்குகின்றேன்;

நாதியற்று நிற்கும் அடியேனின் நிலைதனை ,

எண்ணிநீயும் அருள்புரிந்திட வேண்டுகிறேன் .

ஆதிசேஷன் மீது.......

ஆடிப்பாடி அடியேன் திரிந்த அந்தநாட்களில் ,

உன்னைப் பற்றிய சிந்தனை இருந்ததில்லை ;

நாடிநீயாகவே அடியேன் உள்ளத்தில் புகுந்து ,

உன்தன் பக்கலில் சேர்த்திட வேண்டுகிறேன் .

ஆதிசேஷன் மீது.....